


கோலியனூர் கிழக்கு ஒன்றியம், கோலியனூர் கூட்ரோட்டில், விழுப்புரம் மத்திய மாவட்ட கழக சார்பில் 100 நாள் வேலை உறுதித்திட்ட நிதி ரூ.4034 கோடியை தமிழ்நாட்டிற்கு தராமல் ஏழை எளியோர் வயிற்றில் அடிக்கும் மோடி அரசை கண்டித்து நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில், விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். உடன் இரா.ஜனகராஜ், பி.தெய்வசிகாமணி, இ.சச்சிதானந்தம், வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், டி.என்.ஜெ.சம்பத், இரா.கேசவன், சௌந்தரராஜன், ஸ்ரீதர், ஜெயபால், ஜெயந்தி ராஜகணேஷ், மணி, சந்திரசேகர், அய்யப்பன், மணிவேல், நீலகண்டன், அய்யனார், சிவகுரு, மனோகர், ராவணன், பிரபா, பாலகிருஷ்ணன், மகாதேவன், பெருமாள், பாபு, சிவராமன், அய்யனார், குமார், ராஜேந்திரன், பாலு, மோகன், சம்பத் மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தோழர்கள், மகளிர்கள் பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் சட்டமன்ற தொகுதி மயிலம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் கழக தலைவர் முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கூட்டேரிப்பட்டு ஊராட்சியில் நடைபெற்ற கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ, கலந்துகொண்டு கழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்து 500க்கும் மேற்பட்ட நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் பேச்சாளர் ஆவடி பாஸ்கர், டாக்டர் மாசிலாமணி,சேது நாதன், செஞ்சி சிவா, டாக்டர் சேகர், மணிமாறன், செழியன். வீடூர் ரவி உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

### வந்தவாசி தொகுதி – தவளகிரி நாதர் கோவிலுக்கு சொந்தமான இடத்தில்

# கல்யாண மண்டபம் - வணிக வளாகம் கட்டப்படுமா?

## சட்டப் பேரவையில் எஸ்.அம்பேத்குமார் கேள்வி!

சென்னை, மார்ச். 31-

வந்தவாசி தொகுதி, தவளகிரி நாதர் கோவிலுக்கு சொந்தமான இடத்தில் கல்யாண மண்டபம், வணிக வளாகம் கட்டப்படுமா? என்று தொகுதி உறுப்பினர் எஸ.அம்பேத்குமார் கேள்வி எழுப்பினார்.

இதுகுறித்த விவாதம் வருமாறு:-



**S. அம்பேத்குமார்:** வந்தவாசி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வந்தவாசி நகரத்திற்கு அருகில் உள்ள வெண்குன்றம் கிராமத்தில் தவளகிரி நாதர் திருக்கோயில், ஆயிரம் ஆண்டுகளுக்குமேல் பழமை வாழ்ந்த திருக்கோயில். அந்தக் கோயிலுக்கு ஒவ்வொரு கார்த்திகை தீபத்தன்று சுமார் 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் வந்து செல்கின்றனர். அந்தக் கோயிலுக்கு சொந்தமான நிலம் 41/1, 42/1 என்ற சர்வே எண்ணில் அடங்கிய, வந்தவாசிகாஞ்சிபுரம் சாலையில் 4½ ஏக்கர் நிலப்பரப்பு உள்ளது. அந்த இடத்தில் கோயிலுக்கு கல்யாண மண்டபம், வணிக வளாகம் அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**அமைச்சர் பி.கே. சேகர்பாபு:** உறுப்பினர் அம்பேத்குமார் அவர்கள் பலமுறை இது தொடர்பாக நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் மூலமாக அழுத்தம் கொடுத்து கேட்டிருக்கிறார். திருமண மண்டபங்களைப் பொறுத்தளவில் தொடர் செலவு, தொடரா செலவு என்ற இரு கூறுகளை ஆராய வேண்டியிருக்கிறது. அதோடுமட்டுமல்லாது இந்த ஆட்சி அமைந்தபிறகு 84 திருமண மண்டபங்களை புதிதாக கட்டிக்கொண்டிருக்கிறோம். அதில் 37 முடிவுற்றிருக்கின்றது. சாத்தியக்கூறுகள் இருப்பின், மீண்டும் ஒரு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஆராய்ந்து நிச்சயம் வழியிருக்கும் என்றால், மனம் இருக்கும். ஆகவே, உறுப்பினர் கோரிய அந்தத் திருமண மண்டபத்தை கட்டுவதற்குண்டான, முயற்சிக்குண்டான ஆய்வை மீண்டும், அவரையே அழைத்து சென்று மேற்கொள்வோம்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### முகையூர் வடக்கு ஒன்றியத்தில்

# முதலமைச்சர் பிறந்தநாள் விழா நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி வழங்கினார்!

விழுப்புரம், மார்ச். 31-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி , வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்களின் ஆலோசனைக்கிணங்க விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, முகையூர் வடக்கு ஒன்றியம், ஆலம்பாடி , சித்தாத்தூர், மேல்வாலை, ஒதியத்தூர் ஆகிய ஊராட்சிகளில் பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள், பொதுமக்களுக்கு அன்னதானம் , மகளிர்களுக்கு நலத்திட்ட உதவிகளை விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி வழங்கினார். மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட துணை செயலாளர் R.கற்பகம், ஒன்றிய செயலாளர்கள் ஜி.இரவிச்சந்திரன், S.லூயிஸ், ஜெ.ஜெயபால், நகர செயலாளர் சுந்தரமூர்த்தி, ஒன்றிய குழு தலைவர் தனலட்சுமி உமேஷ்வரன், மாவட்ட கவுன்சிலர் ராஜீவ்காந்தி, முன்னாள் ஒன்றியச் செயலாளர் பிரேமா அல்போன்ஸ், அரசு வழக்கறிஞர் கார்த்திகேயன், ஒன்றிய நிர்வாகிகள் காத்தவராயன் , முருகையன், சாந்தகுமார், சேகர், சுலோச்சனா ஏழுமலை, கோபால், கண்ணன் , ஜெகன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஞானவேல், செந்தில்குமார், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் K.அமுதா, ஊராட்சி மன்றத் இராஜகுமாரி சக்திவேல், கண்டாச்சிபுரம் இரவிக்குமார், கனகா பழனி, சுந்தர வடிவேல், அமுதா, மாணவர் அணி ஜீவானந்தம் ஒன்றிய குழு உறுப்பினர்கள் ராஜ ராஜேஸ்வரி கோபால், குப்புசாமி, மணிகண்டன், வழக்கறிஞர் மதி உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள் மற்றும் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

### சங்கரன்கோயில் தொகுதி

# முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ச.சங்கரலிங்கம் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச், 31-

சங்கரன்கோயில் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் ச.சங்கரலிங்கம் மறைவு செய்தியறிந்து முதலமைச்சர்- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

சங்கரன்கோயில் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் சங்கரலிங்கம் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருந்தினேன்.

வளர்த்து ஆளாக்கிய தந்தையை இழந்து தவிக்கும் கழக வர்த்தக அணியின் இணைச் செயலாளரும் சங்கரன்கோயில் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினருமான திருமதி. முத்துசெல்வி அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### பல்வேறு நலத்திட்டங்கள் மூலம்

# இந்தியாவின் நம்பர் ஒன் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் இருக்கிறார்!

## சேலத்தில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேட்டி!

சேலம், மார்ச். 31-

பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதன் மூலம் இந்தியாவின் நெம்பர் ஒன் முதலமைச்சராகத் திகழ்ந்து வருகிறார் என்று சேலத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.



சேலம் கலைஞர் மாளிகையில் தமிழக சுற்றுலாத் துறை அமைச்சர் ராஜேந்திரன் செய்தியாளர்களை சந்தித்தார்.அப்போது அவர் பேசியது:-

தமிழகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையை குறைக்க வேண்டும், குறைத்தால் பிரதிநிதித்துவம் குறையும் என்ற அடிப்படையில் பாஜக நாடாளுமன்ற தொகுதி மறுவரையறையை, ரகசியமாக எப்படியாவது நிறைவேற்றி விடலாம் என்ற நோக்கில் பிரதமர் மோடி மற்றும் அமித்ஷா ஆகியோர் செயல்பட்டு வருகின்றனர்.

தமிழகம் மட்டுமில்லாமல், மற்ற மாநிலங்களுக்கு தலையின் மீது தொங்கும் கத்தியாக இருந்து வருகிறது.தமிழ்நாட்டு மக்கள் மேலே,நேரடியாக தாக்குதலில் ஒன்றிய அரசு ஈடுபட்டுள்ளது.

முதலமைச்சர் இந்தியாவுக்கு வழிகாட்டும் வகையில் வட இந்திய மாநிலங்களில்உள்ளதலைவர்களுக்கெல்லாம் தகவல் கொடுத்து கூட்டு நடவடிக்கை குழுவை அமைத்துள்ளார். முதல்வர் முக. ஸ்டாலின் அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டி அதில் 58 கட்சிகள் பங்கேற்றது.

கூட்டு நடவடிக்கை குழு அமைக்கப்பட்டு அதன் முயற்சி அடிப்படையில் கர்நாடகா உள்ளிட்ட மூன்று மாநில முதலமைச்சர்கள் தமிழககூட்டத்தில் பங்கேற்றனர்.பல்வேறு மாநிலங்களின் கட்சி தலைவர்கள்,பிரதிநிதிகள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

**சமநிலை மக்கள் தொகை !**

தமிழகம் மற்றும் வட இந்திய மாநிலங்களில் சமநிலையாக மக்கள் தொகை இருந்தது. தற்பொழுது சமநிலை அல்லாமல் மக்கள் தொகையில் அமைந்திருக்கிறது. பீகார், மத்தியபிரதேசம், உத்திரபிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் 20சதவீதம் வரிபகிர்வு நிதியை வாங்கிக்கொண்டு 42 சதவீத சதவீத அளவிற்கு வரிபகிர்வின் அடிப்படையில் மத்திய அரசு வழங்குகிறது.

தமிழகத்திற்கு 100 ரூபாய் கொடுத்தால் திரும்பவும் 29 ரூபாய் மட்டுமே கொடுக்கிறார்கள். அதே போல் கர்நாடகாவிற்கு 100 ரூபாய் வாங்கிக் கொண்டு 14 ரூபாய் மட்டுமே திரும்ப கொடுக்கிறார்கள். ஆனால் வடமாநிலங்களில் 100 ரூபாய் நிதியை வாங்கிக்கொண்டு 425 ரூபாய் கூடுதலாக வரி பகிர்வை ஒன்றிய அரசு வழங்குகிறது. குறிப்பாக பீகார் மாநிலத்திற்கு 100 ரூபாய் வாங்கிக் கொண்டு 922 ரூபாய் வரிபகிர்வு நிதியை கூடுதலாக வழங்கப்படுகிறது. ஒன்றிய அரசு ஒரு கண்ணிற்கு சுண்ணாம்பும், மற்றொரு கண்ணிற்கு வெண்ணையும் வைப்பது போன்று ஏற்றத்தாழ்வுடன் நடந்து கொள்கிறது.

வட மாநிலங்களைத் தவிர்த்து மற்ற மாநிலங்களில் நாடாளுமன்ற தொகுதியின் எண்ணிக்கையை குறைக்க ஒன்றிய அரசு திட்டமிட்டு செயல்படுத்துகிறது.

வடமாநிலங்களில் 80 சதவீதம் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்றால் போதும் ஒன்றிய அரசு தொடர்ந்து ஆட்சியில் இருக்க முடியும் என்ற சூழலை உருவாக்கியுள்ளது.

ஒன்றிய கல்வி அமைச்சர் தமிழகத்தை நாகரிகமற்றவர் என்று என்றெல்லாம் உரையாற்றியுள்ளார். கடந்த இரண்டு ஆண்டுகளாக மணிப்பூர் மாநிலமே பற்றி எரிந்துகொண்டிருக்கிறது. அங்கு கடுமையான பாதிப்புக்கு அம்மாநில மக்கள் ஆளாகியுள்ளனர்.

அந்த மாநிலத்திற்கு ஒன்றிய அமைச்சர்கள் உள்ளிட்டோர்கள் செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. அங்கு மக்களுடைய பிரதிநிதித்துவம் குறைவாக உள்ளது.நாடாளுமன்ற தொகுதியின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் சென்றிருப்பார்கள். இதனால் தான் ஒன்றிய அரசு அந்த மாநிலத்திற்கு செல்லாமல் இருக்கிறது.

தமிழகம் முழுவதும் தொகுதி மறு வரையறை பிரச்சினைகள்

அடுத்த 25 ஆண்டுகளுக்கு தேவையில்லை. அதை நிறுத்தி வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலிமையாக வட இந்தியாவில் இருந்து தலைவர்கள் வலியுறுத்தி உள்ளார்கள்.

100 நாள் வேலை வாய்ப்பு திட்டம் மூலம் நிதி தமிழகத்திற்கு வர வேண்டியதை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளது. இதனை உடனடியாக மத்திய அரசு வழங்க வேண்டும் என்று தமிழக முதல்வர் வலியுறுத்தியுள்ளார்.

கல்வித்துறை, ஊரக வேலைவாய்ப்பு திட்டம் உள்ளிட்டவைகளில் நிதி வழங்காமல் உள்ளது. அதை உடனே வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தப்பட்டு வருகிறது

தமிழகத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும், ஒரு ஊராட்சியில் இரண்டு இடங்களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் குறித்து மிகப்பெரிய ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன .

நாடாளுமன்ற தொகுதி வரையறை பொறுத்த வரைதமிழகமுதலமைச்சர் கூட்டு நடவடிக்கை குழுவில் உள்ள முதல்வர்கள், பல்வேறு கட்சி தலைவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். இதற்காக தமிழக முதலமைச்சர் சரியான முடிவு எடுப்பார்கள்

இந்தியா கூட்டணி அமைந்திருந்தால் சுங்கச்சாவடி அகற்றுவது உள்ளிட்ட நடவடிக்கைகள் நடந்திருக்கும் என்றும் கூறினார்.

இந்தியாவிலேயே நம்பர் ஒன் முதலமைச்சராக முதல்வர் மு.க.ஸ்டாலின் மக்கள் மீது அக்கறையுடன் இருந்திருக்கிறார்கள். இதனை தமிழக மக்கள் உணர்ந்து இருக்கிறார்கள். இதனால் மீண்டும் திமுக ஆட்சி அமையும்.

அ.தி.மு.க.வுடன் கூட்டணி பேச்சுவார்த்தையில் நடைபெற்று வருகிறது என்று ஒன்றிய அமைச்சர் கூறி இருக்கிறார்.இதுதான் கடந்த இரண்டு ஆண்டுகளாக பாஜக, அதிமுக கள்ளஉறவில் இருந்து வருகிறது என்று கூறி வந்தார். தற்போது தமிழக முதல்வர் சொன்னது நிரூபணம் ஆகி உள்ளது.

திமுகவிற்கு போட்டி அதிமுக மட்டும் தான்... இரண்டாவது இடத்திற்கு மற்ற கட்சிகள் நீயா நானா என்று போட்டி போட்டு வருகிறார்கள்.

மேற்கண்டவாறு பேட்டியில் அவர் கூறியுள்ளார்.

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு

சேலம் மத்திய மாவட்டம், சேலம் மாநகரம், 48வது வட்டத்தைச் சேர்ந்த ராமலிங்கம் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 29.03.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் ச.முத்துச்செல்வி அவர்களின் தந்தை எஸ். சங்கரலிங்கம் (வயது 83) நேற்று 30ம் தேதி காலை சங்கரன்கோவில் காந்தி நகரில் உள்ள அவரது இல்லத்தில் மறைவெய்தினார்.அன்னாரது உடலுக்கு தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.உடன் சங்கரன்கோவில் ஒன்றிய செயலாளர் லாலா சங்கர பாண்டியன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.




தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 100 நாள் வேலை உறுதி திட்டத்தில் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூபாய் 4034 கோடி நிதியை வழங்காமல் தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க அரசை கண்டித்து தென்காசி கிழக்கு ஒன்றியம் சார்பில் குத்துக்கல்வலசை யில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் கண்டன முழக்கங்கள் எழுப்பி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.உடன் மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ராணி,ஒன்றிய செயலாளர் அழகு சுந்தரம் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.